10 ஏக்கர் பரப்புள்ள ஏரிப் பகுதியில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவது குறித்த கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரை ஆகியவை பெறப்பட்டு மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான அனுமதியோடு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.*

திரு. கு. லிங்கமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருத்துருவை ஆய்வுக்கு அனுப்பிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

41—

சொந்தக் கட்டடம்

***5900**—**திரு. ஆர். சீனிவாசன்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு நகரத்திலுள்ள வணிக வரி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) ஆற்காடு நகரத்திலுள்ள வணிக வரித் துறை அலுவகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஏதுவாக, ஆற்காடு வட்டம், ஆற்காடு தாஜ்புரா கிராமம் பழைய சர்வே எண் 16/3, புதிய சர்வே எண் 16/34-ல் உள்ள 4,200 சதுர அடி காலி மனை, தாஜ்புரா ஊராட்சி மன்றத் தலைவர் திரு. சம்பத்

அவர்களால், வணிக வரித் துறைக்கு தானப் பத்திரம்மூலம் ஆற்காடு சார்-பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, ஆற்காட்டில், ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தில் வணிக வரி அலுவலகம் கட்டுவதற்கு ஏதுவாக வரைபடம் மற்றும் உத்தேச மதிப்பீடு ஆகியவற்றை பொதுப் பணித் துறையிடமிருந்து பெற்று அனுப்புமாறு, இணை ஆணையர், வணிக வரி, வேலூர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன் அவர்கள்.

திரு. ஆர். சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகம் போற்றும் உன்னதத் தலைவி, தமிழகத்தில் தன்னிகரில்லா ஆட்சி நடத்தி, தமிழக மக்களுக்குத் தாயாக, தெய்வமாக இருந்து தமிழக மக்களைக் கட்டிக் காத்து, நூறு ஆண்டுகளில் செய்ய வேண்டிய சாதனைகளை ஓராண்டில் செய்து முடித்து, (மேசையைத் தட்டும் ஒலி) சரித்திர சாதனைப் புரிந்து வருகின்ற மனிதப் புனிதர் மாணிக்கத் தலைவியாம், நாங்கள் அன்றாடம் வழிபடும் எங்கள் குடும்ப தெய்வம் மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆற்காடு சட்டமன்றத் தொகுதியில், ஆற்காடு நகரத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் வணிக வரி அலுவலகத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்டுவதற்கு ஆணை வழங்கிய எங்கள் தெய்வத்தின் தெய்வத்திற்கு கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.